மாதர் மனோரஞ்சினி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஔவையார்.

Vol-XIII.	Madras: October 1911.	No-10.
புத்தகம் - கரு.	சென்னப்பட்டணம்: அக்டோபர்மீ 1911.	இலக்கம்-10.

நமது அரசசக்ரவர்த்தியும் ராணியும் சிம்மாசனத்திற் குரியவர்.

3-வது அத்தியாயம்.

க்ளாரன்ஸ் பிரபு அசௌக்யமாயிருந்து மரணமடையவே, அலக்சாண்டிரா ராணியாரும், 7-வது எட்வர்டும் மிக விசனப்பட்டார்கள். ஏனெனில் இவர்தான் மூத்தபிள்ளை, இளவரசு, சிம்மாசனத்திற்குரியவர்.

இச்சமயத்தில் இங்கிலாந்தில் இன்புளூயன்ஸா என்ற சுரம் அதிகமாக எங்கும் பரவியிருந்தது. இச்சுரம் நமது ஜார்ஜ் அரசருக்கு வரவே தாய்தந்தையர்கள் பட்ட துயரத்திற்களவேயில்லை. தெய்வாதீனமாய் இவருக்குண்டான பிணி நீங்கவே, இவருடைய தாய்தந்தை இவர் மிக்க பலஹீனமாயிருப்பதைக்கண்டார்கள். ஆகையால் அவருடைய தேக சௌக்யத்திற்காக ஈஸ்ட்போர்ன் என்ற இடத்துக்குப்போனார்கள். டிவான்ஷைர் பிரபு (Duke of Devonshire) ராஜகுடும்பத்தாரை காம்ப்டன் என்ற பேருள்ள நல்ல கிரகத்தில் வசித்து வரும்படி கேட்டுக்கொண்டார். இங்கு தேகசௌக்யத்திற்குற்ற காற்றுக்கும், விநோதமான காட்சிக்கும் ஆவல்கொண்டு அவர்கள் சந்தோஷத்துடன் ஒத்துக்கொண்டார்கள். இவ்விடத்திற்கு இவர்கள் வரும்பொழுது ஜார்ஜ்அரசர் தேகம்மெலிந்தவராகக் காணப்பட்டார். இவருடைய தாயாரும், தந்தையும் படிப்படியாய் அநுபவித்த வருத்தங்களால் தேகத்தில் இரத்தமில்லாதவர்களாய் தென்பட்டார்கள். இங்கு வசித்துவந்த ஒருமாதத்திற்குள் எல்லாரும் தேகசௌக்யமடைந்தார்கள். ஜார்ஜ் அரசர் இங்கு வந்தபோது காணப்பட்டதைவிட அதிக பலவானாக தென்பட்டதைக்குறித்து அங்குள்ள ஜனங்களெல்லாம் சந்தோஷமடைந்தார்கள்.

1892-ம் வருஷம் வசந்தகாலத்தில் ப்ரோபஸர் ஹின் என்பவருடன் ஹீடல் பார்க்கில் தங்கியிருந்தார். படிக்காதவேளையில் அந்த அழகான நகரத்தைச்சுற்றி உலாவிவருவார். இச்சமயத்தில் தாம் சந்திக்கும் ஜனங்களுடன்

கர்வமின்றி பேசுவார். ஓடக்காரன் பொழுது போக்குக்காக இவரைச் சந்தோஷப்படுத்திவந்தான். அங்குள்ளவர்கள் பந்தாடுமிடத்திற்குச் சென்று தாமும் ஆடுவார். இவ்விதம் காலம் கழித்து கப்பற்படைக்குத் தலைமையை வகித்திருந்தார். இப்படி வெகுநாள் நீடித்து செய்துவரமுடியவில்லை. யார்க் பிரபுவாக நியமிக்கப்பட்டார். இனி கப்பற்படையில் வேலை இவர் செய்து வரமுடியுமாவென ஜனங்கள் எண்ணலானார்கள். ஏனெனில் இனி சிம்மாசனத்திற்குரியவர் ஜார்ஜன்றோ? அதற்குத் தக்கவேலையும் பொறுப்புமதிகம். ஆயினும் தற்சமயத்தில் முன்போல் அதிககாலம் கப்பற்படையில் செலவழிக்காமலிருக்கும்படி ஏற்படுத்திக்கொண்டார். ராஜாங்க சம்பந்தமான சிற்சில அலுவல்களைச் செய்வதைவிட கப்பற்படையிலிருந்து அங்கு தமக்குரிய வேலைகளைச் செய்ய அதிக அவாவிருந்தது. ஆனால் சிம்மாசனத்திற்குரியவராகிவிட்டமையால் அந்த அந்தஸ்துக்குத் தக்கபடி செய்யவேண்டிய முக்ய விஷயங்களை இவர்தானே கவனித்துவரவேண்டும்.

1892-ம் வருஷம் ஜூன்மாதம் 17உ பார்லிமெண்ட் மகா சபைக்கு பிரபுவாக நியமிக்கப்பட்டார். இதற்கு சில சடங்கு உண்டாம். இப்பிரபு பட்டத்திற்குரிய உடுப்புகளைத் தரித்துக்கொண்டு லார்ட் சேன்ஸலர் முன்பாக வரவேண்டுமாம். இவருக்குப் பின் மற்ற பரிவாரங்கள் வருமாம். இது ஒரு பவனிபோல் அழகாயிருக்குமாம். அங்குள்ள குமஸ்தா ஜார்ஜ் அரசர் "பார்லிமெண்ட் மகா சபையில் பிரபுவாய்விட்டார்" என படித்து இவரை சத்தியம் செய்யச்சொல்வாராம். இது முடிந்ததும் இவர் பார்லிமெண்ட் பதிவு புஸ்தகத்தில் தமது கையெழுத்தைப் பதிந்துவிட்டு, அங்குள்ளவர்களையெல்லாம் வணங்கியபின் வந்துவிட்டார். யாவரும் நமது "ஜார்ஜ்அரசர்" பிரபு ஆய்விட்டாரென சந்தோஷத்துடன் கரகோஷம் செய்தார்கள்.

ஆல்பர்ட் விக்டர் திடீரென்று இறந்தது எல்லாதேசத்தாருக்கும் மிக்க துக்கத்தையுண்டுபண்ணிக்கொண்டிருந்தது. இராஜகுடும்பத்தார்கள் 1892-ம் வருஷமுழுவதும் துக்கம் கொண்டாடினார்கள். 1893-ம் வருஷத்தில் யார்க் பிரபு (நமது ஜார்ஜ் அரசர்) பொதுக்கூட்டங்களுக்கு வந்து ஒவ்வொரு கூட்டத்திற்குத் தக்கவாறு தாம் சபைத்தலைமையைவகித்துப் பேசவேண்டியிருந்தகாலத்தில் கூச்சமின்றி நன்றாகப் பேசி வந்தார். இவ்விதம் மானுமித் தொழில் செய்பவர்கள் செய்யவும் முடியாது. அல்லது நீன்றாகஉபந்நியாசம் செய்பவர்களின் சாமார்த்தியத்தைக்கண்டு மெச்சிப்பேசவும் சக்தி யில்லவேயில்லை. ஆனால் நமது அரசரோ அப்படிக்கின்றி எந்த சபைக்குப்போனாலும் எவ்விஷயத்தைபற்றி பேசவேண்டியிருந்தாலும் தம்மாலியன்றளவு நிறுத்தி யாவருக்கும் தெரியும்படி பேசிவந்தது புகழத்தக்கதல்லவா?

முதல் முதலில் ஒரு விருந்து சாப்பாட்டுக்கு இவர் அழைக்கப்பட்டபொழுது இவர் தமதுபந்துக்களில் ஒருவரை அணுகி சாப்பாட்டிற்கு அழைக்கப்பட்டிருக்கிறேன். இன்னதுபேசுகிறதென்று எனக்குப் புலப்படவில்லை. ஏதாவது குறி குறித்து எனக்குக் கொடுக்கவேண்டுமென்றார். "எனது அருமையான பிள்ளாய்! சிறிய கடிதத்தில்" நீ பேசபுகும் விஷயத்தை டைப் மெஷினில் கொடுத்து அச்சடித்து வைத்துக்கொள். கஷ்டமேயிராது. அச்சமயத்தில் நீ நின்று எழுதியிருப்பதை படித்துவிடு" என்றார்.

நமது அரசர் அவருக்கு வந்தனமளித்தார். ஆனால் அவர் சொன்ன புத்தியை அநுசரிக்கவில்லை. அவ்விருந்து சமயத்தில் இவர் பேச எழுந்து நிதானித்து நன்றாய்ப்பேசினார். அப்பொழுது இவர் சமீபத்தில் இவருடைய அந்த உறவினரிருந்தார். "கர்வமுள்ள பையன்! நான் சொன்னபடி ஏன் இவன்செய்யவில்லை? நிச்சயமாக மத்தியில் பேசமுடியாமல்நின்றுவிடுவான்" என்று இவர் அன்புமேலிட்டுச் சொன்னார். ஆனால் நமது அரசர் பேசும் பொழுது அப்படி நடுவில்தயங்காமலும் உளரிக்கொட்டாமலும், தெளிவாக வும், யாவரும் கேட்டு மெச்சும்படியாகவும் உபந்நியாசம் செய்துமுடித்தார். இவ்விதம் இரண்டு மூன்றுதடவை பிரசங்கம் செய்தார். அவைகள் வெகு சிறந்தவைகளென்று அநேகர் சொன்னார்களாம். ஜார்ஜ் அரசர் தமது தகப்பனாரிடத்திற்குச் சென்று அப்பா! இவ்வளவுபேர் கையொப்பம் செய்திருக்கிறதே அவ்விருந்து வெகு சிறப்பாக நடந்ததென்பதைக் காண்பிக்கிறதே என்றுசொன்னார். அப்பொழுது உறவினராகிய கேம்பிரிட்ஜ்பிரபு இவ்வேடிக்கையைப் பார்த்து மனங்குளிர சிரித்தார்.

குழந்தைகளைக் குரூரமாக நடத்துவதைத் தடுக்கும் சபையின்கூட்டம் பிப்ரவரிமீ நடந்தேறியது. அப்பொழுது இவர் சபைத்தலைமையை வகித்து இந்த சபையார் 8-வருஷங்களுக்குள் குரூரமாய் நடத்தப்பட்டு வந்த 25,000 திக்கற்ற பிள்ளைகளை சம்ரக்ஷித்து வருவதைப்பற்றி சிலாகித்து மிக்க அநுதாபத்துடன் பேசினார். அக்காலத்தில் ஹோம் செக்ரிடெரியாயிருந்த மிஸ்டர் ஆஸ்குய்த் செய்த பிரசங்கத்திலிருந்து அநேக நல்விஷயங்களை யெல்லாம் எடுத்துக்காட்டினார். ராஜவம்சத்தைச் சேர்ந்த சபாநாயகர் இச்சபையின் விருந்து சாப்பாட்டுக்காக 2,800 பவுன் கையொப்பம் செய்யப்பட்டிருப்பதும் திருப்திகரமாயிருக்கிறதென்றார். அதேசமயத்தில் ஒருவியாபாரச் சபையார் ஜார்ஜைக்கண்டு மகிழ்ந்து அவருக்கு ஒரு அழகான பெட்டியை இனாமாகக் கொடுத்தார்கள். பின்னிட்டு போர்க்கப்பற்கூட்டத் தலைவராக (வைஸ்-அட்மிரலாக) நியமிக்கப்பட்டார்.

மே அரசிக்கும், யார்க்கு பிரபுவுக்கும் 1893-ம் வருஷம் மேமீ 3உயன்று தான் விவாக நிச்சயமான நல்ல சமாச்சாரம் பைரங்கமாக எல்லாருக்கும் தெரியவந்தது. அடுத்தநாள் எல்லா பத்திராதிபர்களும் இவ்விவாகம் எல்லாதேசத்தாருக்கும் திருப்தியையும் சந்தோஷத்தையும் உண்டாக்குகிறதென்று எழுதினார்கள். மாப்பிள்ளையாகப் போகும் ஜார்ஜின் தகப்பனார் மிட்ல் டெம்பல் என்ற பாரிஸ்டர்கள் பழகிவரும் ஸ்தலத்தில் புசிக்கும்பொழுது தமது குமாரர் மே என்ற இளம்பிராயமுள்ளவும் மனதைக் கவரத் தக்கவுமான மாதை மணம்புரிந்துகொள்ள ஏற்பாடு செய்திருக்கின்றமையால் எமது குமாரன் வராததற்காக மன்னிக்கவேண்டுமென்றார்.

☞ பத்திராதிபர்.

உயர்ந்த அந்தஸ்துள்ள ஸ்திரீகளுக்கும் வேலை அவசியம்.

சென்ற ஜுலை மாசத்திய சஞ்சிகையில் நம் பத்ராதிபர் "ஏழை ஸ்திரீகளுக்குக் கைத்தொழில்" இருக்கவேண்டும் என்றும் அவ்விஷயமாக இன்னும் விரிவாக எழுதுவது நலம் என்றும் எழுதியிருக்கிறார். அதைக் கண்டு களித்த நான் உயர்ந்த அந்தஸ்துள்ள ஸ்திரீகளுக்கும் வேலை அவசியம் என்றதை எழுதலானேன்.

உயர்ந்தஅந்தஸ்துள்ளஸ்திரீயார்?சாதாரணமாய்ச் சமையல்வேலைஇல்லாமல்ஆள்போட்டு வீட்டுக்காரியங்களை நடத்தக்கூடிய ஸ்திதி உள்ளஒருத்திஅப்பட்டத்தைப் பெறுகிறாள். அப்படிப்பட்ட பட்டம்பெற்ற ஸ்திரீகள் நம்மில் அநேகர் உண்டு. அவர்கள் செய்யும் வேலை ஒன்றும் இல்லாமலே இருக்கிறது. எப்போது வேலையில்லாமல் போய்விட்டதோ அப்போதே உடம்பு மிகப்பருத்து உலாவுவதும் துர்லபமாக முடிய நேர்ந்துவிடுகிறது. வீட்டிலுள்ள மருமக்கள் பேரில் குற்றங் கண்டுபிடிப்பதே வேலையாய் முடிய அவர்களுக்கு மனஸ்தாபம் விளைகிறது. அப்பெரிய மனுஷிகள் ஸஹஜமாய் ஊர்சேரி போகவர அதிகப் பிரியப்படுவது வழக்கம். அப்படி அவர்கள் தம் பெண்மக்கள் வீட்டிற்குப் போவதானாலும் சிரமப்பட்டே செல்லவேண்டும். அவர்கள் மற்றவர்களுக்குச் செய்யத் செலுத்த இருந்தாலும் அவர்களுக்கு வேண்டிய ஆசார உபசாரங்களை எளிதில் செய்யமுடியாமல் படும் சிரமம் கூடவே இருக்கலாகிறது. இப்படித் தமக்கும் பிறர்க்கும் சிரமமாகவே இருக்கிறார்கள் இப்போது பெரிய மனுஷிகளாய் இருப்பவர்கள்.

இது இருக்கட்டும். வேலையில் பிரியவேலை என்பது ஒன்று. அது உலகில் ஒவ்வொருவருக்கும் இருக்கலாம். என்றாலும் இந்தியாவில் புருஷர்களுக்குள்ளேயே இல்லை என்றால், ஸ்திரீகளுக்குள் கேட்பானேன்!

இங்லண்ட்முதலிய நல்லநாகரீகமடைந்தநாடுகளில் ஸ்திரீ புருஷர்என்ற வித்தியாசம்இல்லாமல் எல்லாருக்கும்இருந்தேவருகிறது. இந்தப்பிரியவேலை செய்யக்கடமைப்பட்டதாகிய ஒன்று அல்ல என்பது பெயர் மாத்திரத்தாலேயேதெரியலாகும். ஏதோ பிரியத்தால் செய்வதுதான்.அதுஜீவனோபகாரமாகஇருக்கவேண்டும் என்பதும் இல்லை; பணம் பெறத்தக்கதாக இருக்கப்படாதுஎன்பதும் இல்லை. இது நமக்கும் ஒருவிதத்தில் புதியது அல்ல.

நம்வீட்டில்பெண்கள் பாசித்தட்டம், தையற்படம் முதலியவற்றைச் செய்கிறார்கள்.இவைபோல இருக்கும் வேலைகள் இன்றும் அநேகம் உண்டு. அவைகளைச்செய்யலாம்.உதாரணமாக, காகிதத்தில் வேடிக்கை வேடிக்கையாக விளையாட்டுச் சாமான்கள் பலபல செய்யலாம், நல்ல நல்ல சித்ரங்கள்வரையலாம்,சமாசாரப்பத்திரிகைகளை ஊக்கத்தோடு வாசிக்கலாம்,கழுத்துப்பட்டை, தொப்பி முதலாயின பின்னலாம். படிக்கத் தெரிந்து கொண்டவர்கள் படிப்பு வாசனை தெரியாத தம் சகோதரிகளுக்குப் படிப்புச் சொல்லித் தரலாம்.

தங்கள் வீட்டுக் குழந்தைகளுக்கு இப்போது நமக்குச் சக்ரவர்த்தினியாய்விளங்கும் மாட்சிமை தங்கிய மேரி மஹாராணியாரைப்போல கிண்டர் கார்ட்டன் முறைப்படி போதிக்கலாம்.இன்னும் இவை போன்ற எத்தனையோ

வேலைகளையெல்லாம் ப்ரியவேலையாக வைத்துக் கையாடிவந்து காலத்தை நல்ல விதமாய்க்கழித்துக் கதிபெறலாம்.

இப்போது நமமவர்களை தாவர சாஸ்திரிகளாய் நம் தேசச் செடிகொடிகளை விளக்கி நூல்கள் எழுதுகிருர்கள். அவற்றைப் படித்துவிட்டு "அவரைச்செடியின் வாழ்க்கை" யை நன்ருய்ச் சாஸ்திர ரீதியாய்ப் பரிசோதனைகளுடன் படித்துப்பின் தம்மால் கூடியதானுல் மல்லிகைச் செடியின் விருத்தாந்தத்தை விளக்கப் பார்க்கலாம். இவைகள் எல்லாம் லோகத்தில் எத்தனை சிறந்தவைகள் பாருங்கள்! இவற்றில் எதையும் மிகவும் ஸ்ரமப்பட்டுச் செய்தாலும் ஒருவர் 'இதைச்செய்' என்று ஏவிச் செய்யாததலால் ஸ்ரமம் என்பது கொஞ்சமும் தோன்ருமல் அதை மேலும்மேலும் செய்ய பிரியம் உண்டாகும்.

இப்படிக்கெல்லாம் இருப்பது ஏன்! என் பிரியமுள்ள பெரிய மனுஷிச் சகோதரிகளே! எத்தனை ஸௌகிர்தம் உண்டாக்கும் என்பதை ஆய்ந்தோய்ந்து பாருங்கள். அப்போது அதன் பிரயோஜனம் தெரியாமல் போகாது.

ஏதோ ஒரு நல்ல பிரியவேலையைக் கைக்கொண்டு ஊக்கத்துடன் உழைத்தால் அறிவு விர்த்தியாகும். புத்தி கூர்மையாகும். வீண் அபவாத கர்மங்களில் கைவைக்கக் காலம் இருக்காது. இதனுல் மற்றவர்களும் அதிக நலமை அடையலாம். இது இப்படி இப்படி என்பது நிச்சயமாய் விளங்கும்.

இதையெல்லாம் பார்க்கும்குழந்தைகளும்—அவர்களுக்குப் பாவனுசக்தியை பகவான் பலமாய்க் கொடுத்திருப்பதால்—அதையெல்லாம் அந்தந்தப் படிசெய்வோம். அல்லது செய்வதைப் பார்த்தோ பலபல நல்ல பாடங்களைப் படித்துக்கொள்வோம்.

ப்ரியவேலை என்று செய்த அபாரமான ஒரு பொருளை வெகு பணம் கொடுத்துப் பலர் ஆசையுடன் வாங்க முன் வருவார்கள். இப்படியாக ப்ரிய வேலை ஒன்றைக் கையாள்வதில் பேரும் புகழும் பெருவாழ்வும் கிடைக்கும்.

"நித்த நிகழ்கின்ற நீடுலகின் மாந்தர் செய
லத்தனையு மீசன் செயல்"

☞ கோவை. வீ சிதம்பர உபாத்யாயர்.

ஜயதேவி.

(220-வது பக்கத்தொடர்ச்சி.)

ஜெய்பால் ஜெஸ்ஸல்மீருக்கு வந்து ஜயாவைக்கண்டு அலாவுதீன் இறந்திருப்பான் என்று சொன்னுன். இனி அவன் தொந்திரவொன்றும் நம்மைப் பிடிக்காது என்றும் சொல்லி சந்தோஷமாக யிருந்தான்.

சிலநாள் கழிந்தபின் ராஜா ரத்தம்சிங் அவர்கள் ஒரு ஆளைத் தமது குமாரத்தியினிருப்பிடத்திற்கு அனுப்பினுன். அவன் வந்து "தங்களை

உடனே டெல்லிக்குப் புறப்பட்டு வந்து, டெல்லி சக்ரவர்த்தியை மணம்புரியும்படி தங்களது தகப்பனர் விரும்புகிருர்" என்றான்.

இச்சங்கதி இத்தம்பதிகளின் செவியில்படவே, நாராசம்போலிருந்தது. ஏனெனின் இவ்விருவரும் விவாகம் புரிந்துகொண்டு இல்லற வாழ்க்கையை இன்பமாகக் கழிக்கலாமென்று எண்ணியிருந்தார்களல்லவா ? ஜெய்பால் மனது துடித்தது. இவ்விதம் நடக்கவேண்டுமென்று ரத்தம்சிங் ஐயாவுக்கு அனுப்பிய சமாச்சாரம் சிறிதும் ஜெய்பாலுக்குப் பிடிக்கவில்லை. இப்படி செய்ய ஐயா டெல்லி மா நகருக்குப்போவது உசிதமல்லவென்று சொன்னான். ஐயாவும் மனச்சந்தோஷமின்றி "ஏன் நாமிருவரும் இங்கிருந்து அவதிப்பட வேண்டும்? என் தகப்பனர் தம் உயிரைக் கவனிக்கிருர்; ஆனால் என் மானத்தையும், கௌரவத்தையும் சிறிதும் கவனிக்கத் தவறிவிட்டார்போல் தோன்றுகிறது. அவரிஷ்டப்படிசெய்வதைவிட விரோதிகளால் உயிரைத் துறப்பது நலமல்லவா" வென்று துக்கத்துடன் சொன்னாள்.

ஐயாவினுடைய பந்துக்கள் இச்சமாச்சாரத்தைக் கேட்டு திகிலடைந்து "ஐயோ! நமக்கு ஜாதிப்ரஷ்டம் உண்டாகா வண்ணம் ஐயாவை காளிக்கு பலியாக கொடுத்து விடலாம். அப்படிச் செய்வதால் அவளுக்கும் துக்கமிராது. நமக்கும் ஜாதிப்ரஷ்ட முண்டாகாது" என்றார்கள்.

ஐயா, இச்சங்கதியைக் கேள்வியுற்று தப்பித்துக்கொள்ள வகையொன்று மில்லாவிடின் அப்படித்தான் செய்யவேண்டும்; ஆனால் அவ்விதம் செய்ய இப்பொழுது அவசரமில்லை. நான் எனது அன்புள்ள சுற்றத்தாரை விட்டுப்பிரிந்திருக்க மனம் வரவில்லை. ஏன் அநியாயமாய் துர்மரண மடைய வேண்டும்? எனக்கு கணவராக வாய்க்கப்போகும் ஜெய்பால் உயிரோடிருக்கும் வரையில் எனக்கு யாதொரு பயமுமில்லை. ஒரு கெடுதலும் எனக்குண்டாகாது என்றாள்.

இவ்வார்த்தைகளை இவளது உறவினர்கள் கேட்டு, "விதியை யாரால் வெல்ல முடியும்? எதுவரினும் வரட்டும். உடனே இவ்விருவருக்கும் விவாகத்தைச் செய்து முடிப்போம்" என்று தீர்மானித்தார்கள்.

விவாகதினம் குறிக்கப்பட்டது. அதற்கு வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் செய்து வைத்துக்கொண்டார்கள். விவாகதினத்தில் பல கிராமங்களிலிருந்து திரள்திரளாக பிராமணர்கள் வந்து குவிந்தார்கள். சாஸ்திர விதிப்படி விவாகம் முடிந்தது. பிராமணர்களுக்கு தானதர்மங்கள் செய்தார்கள். பூரி தக்ஷிணையும் அளித்தார்கள். யாவரும் தம்பதிகளை ஆசிர்வதித்தார்கள். ஆனால் இவர்களுடைய பந்துக்களின் முகங்களில் சந்தோஷக்குறி தென்படவில்லை. தம்பதிகளும் ராஜாரத்தம்சிங் சிறையிலிருப்பதைக் குறித்து மிக மனம் வாடின முகத்துடன் தென்பட்டார்கள். ஆயினும் ஜெய்பால் எவ்விதமாயாவது தமது மாமனாரை விடுவிக்க ஏற்பாடும், யோசனையும் செய்துவந்தானே யொழிய விவாக சமயத்தில் மறந்திருக்கவில்லை. இச்சங்கதியை ஐயாவிடத்திலும் சொன்னான்.

விருந்து சாப்பாடு ஆரம்பிக்குமுன் ஐயா அரமனையிலுள்ள சமையல் கட்டுக்குச் சென்றாள். அங்கு விறகு வைக்கோல் முதலியவைகள் வைத்திருக்குமிடத்திற்குச் சமீபத்தில் நின்றுகொண்டு தனது நகைகளைச் சீராய் அணிந்து கொண்டிருந்தாள். இதற்கு அடுத்தாற்போல் ஒரு மண்டபமிருந்தது. அதற்குள் இவளது சிற்றப்பனும், சிறிய தாயாரும் சென்று தனிமையான ஒரு இருட்டறையில் புகுந்து பேசிக்கொண்டிருந்தார்கள். ஐயாவுக்கு இவர்கள்மீது

சந்தேகங்கொண்டு அம்மண்டபத்திற்கடுத்த இருட்டு அரையின் வழியாக அங்கு சென்று ஒரு மூலையில் ஒளிந்துகொண்டு இவ்விருவர்கள் பேசுவதை ஒற்றுக் கேட்டுக்கொண்டிருந்தாள்.

"தம்பதிகள் எங்கே?" என்று சிற்றப்பன் கேட்டான்.

"கலியாண கூடத்தில்" யிருக்கிறார்கள் என்றாள்.

"நிச்சயமாக உனக்குத் தெரியுமா" என்றார்.

"சில நிமிஷங்களுக்குமுன் அவர்களிருவரும் சேர்ந்து சந்தோஷமாகப் பேசிக்கொண்டிருப்பதைக் கண்டேன்" என்றாள்.

உனது அபிப்பிராயம் என்ன ?

எதைக்குறித்து ?

"இவ்விவாகத்தைப்பற்றி"

"எனக் கிஷ்டமேயில்லை. ஜயா உயிருடனிருப்பதைவிட அவளுக்கு மரணம் சம்பவித்தால் மிக நன்மையாயிருக்கும். ஏனெனில் எப்படியும் அலாவுதீன் இவளையடைய முயன்றுவருவான். எவ்விதமாயாவது இவளை நம்மிடத்திலிருந்து அபகரித்துக்கொண்டு போவான். அச்சமயத்தில் நமக்கும் ஏதாவது தீங்கும் செய்யலாம்."

"அவர்களிருவரும் நசிந்துபோகவேண்டியதே. ஏனெனில் ஜெய்பால் விரோதிகளிருக்குமிடத்திற்குப் போகாமலிரான். அவர்களாலேயே பலன் கிடைத்துவிடும்."

"அவன் உண்மையான ராஜபுத்திரன், தைரியவான். சத்தியமே இவனிடத்தில் குடிகொண்டிருக்கிறது. ஆனால் இவனுக்கு சைனிய பலமில்லை. இவன் அவர்களுக்கு வரவா, செலவா? ஒரு நொடியில் இவன் அவர்கள் வாளுக்கு இறையாவான்."

"அவர்களை எப்படி உயிரைவிடும்படி செய்கிறது?"

"நான் சொல்லுகிறேன், கேளுங்கள். எல்லாருக்கும் வெள்ளிக்கிண்ணத்தில் பலகாரம் வைப்போமல்லவா? நான் இரண்டு கிண்ணங்களில் அவர்களுக்கு வேண்டிய பலகாரங்களுடன் விஷம் கலந்து வெகு ஜாக்கிறதையாக உங்கள் கிண்ணத்திற்கு எதிரில் வைக்கிறேன். அவர்கள் யாதொரு சந்தேகமின்றி புசித்தவுடன் யமலோகத்துக்குச் சென்றுவிடுவார்கள். நமது குலத்துக்கு அப்பால் யாதொரு அவமானமும் பயமுமிராது."

சிற்றப்பனும் திருப்தியடைந்து அப்படி வெகு ரகசியமாய் இக்காரியத்தை முடித்து விடு என்று சொல்லி யாராவது நாம் பேசினதைக் கேட்டார்களோவென்று அஞ்சி அங்குமிங்கும் பார்த்தான். அவ்விடம் இருளால் சூழ்ந்திருந்தமையால் ஜயா யிருப்பது இவனுக்குப் புலப்படவில்லை. ஒருவருக்கும் நமது யோசனை தெரியாதென்று மனதைத் தேற்றிக்கொண்டு இருவரும் வெளியில் வந்துவிட்டார்கள்.

ஜயாவோ இவர்கள் செய்த துராலோசனையைக் கேட்டதும் நடுங்கினாள். மார்பு படபடவென்று அடிக்க ஆரம்பித்தது. ஐயோ! என் கதிஎன்ன ஆகுமோவென்று மனதிலேயே புலம்பினாள். இவர்கள் வெளிச்சென்றதையறிந்து மெதுவாக தான் வந்த வழியே சென்று தனது கணவனைக் கண்டு யாவற்றையும் விவரமாய்ச் சொன்னாள். ஜெய்பாலுக்கு வந்த கோபத்திற்களவில்லை. உடனே பழிக்குப்பழி வாங்க வேண்டுமென்று தீர்மானித்தான். இவன் மனைவி மகா புத்தியுள்ளவள். பொறுமையுள்ளவள். தனது கணவர் கோபத்தை ஒருநொடியில் அடக்கி, அதைப்பற்றி கவனிக்காமலிருக்கும்படி

வேண்டிக்கொண்டு தான் செய்திருக்கும் யோசனையைச் சொன்னாள். ஜெய்பால் கோபத்தை அடக்கிக்கொண்டு கவனமாக அவள் சொல்வதைக் கேட்டான்.

"எல்லாரும் புசிக்க உட்காருவதற்குமுன் தங்களுக்கு எதிரிலுள்ள சிறிய மாமனருக்காக வைத்திருக்கும் கிண்ணத்தை எடுத்து தங்களிடத்தில் வைத்துக்கொண்டு, தங்களுக்கு முன் வைத்திருக்கும் வெள்ளிக்கிண்ணத்தை அதற்குப் பதிலாக ஒருவருக்கும் தெரியாதபடி வைத்துவிடுங்கள். நானே என்னிடத்திலுள்ள கிண்ணத்திலிருக்கும் பலகாரங்களைப் புசிக்கவேமாட்டேன். இவ்வித துர் எண்ணத்தோடு செய்த என் சிற்றப்பன் விஷம் கலந்ததைப் புசிப்பார். அவர் இறந்தால் அவருடன் என் சிறிய தாயாரும் உடன் கட்டை ஏறுவாள். அப்பொழுது நாம் பழிக்குப் பழி செய்தவர்களாவோம்." என்றாள்.

ஜெய்பால் தனது சிறுபிராயமுள்ள மனைவி செய்திருக்கும் யோசனையைக்கேட்டு மிகவும் மகிழ்ந்து அவளை ஒருதடவை ஆலிங்கனம் செய்துவிட்டு, அவள் சொன்னபடிதான் செய்வதாக சம்மதித்தான். மேலும் இதுதான் துஷ்டர்களைத் தண்டிக்க நல்ல வழியென்றும் சொன்னான்.

எல்லாரும் போஜன மண்டபத்திற்கு வந்தார்கள். சிற்றப்பனும், சிறிய தாயாரும் தங்கள் எண்ணிய எண்ணம் கைகூடுமென்றும், தங்களது துராலோசனை இரகசயமாயிருக்கிறதென்றும் நினைத்து, புன்சிரிப்புள்ள முகத்துடன் வந்தவர்களுடன் முகமலர்ச்சியுடன் பேசிக்கொண்டிருந்ததுடன், தம் பதிகளிடத்தில் மிக அன்பு பாராட்டுபவர்கள் போல் பாவித்து வந்தார்கள். எல்லாரும் தங்கள் ஸ்தானத்தில் போஜனமுண்ண உட்கார்ந்தார்கள். ஜெய்பாலும் ஜயாவும் சபையில் வந்து யாவரையும் வணங்கி தங்கள் ஸ்தானத்தில் உட்கார்ந்தார்கள். ஒவ்வொரு இலைக்கு எதிரில் ஒரு சிறு விளக்கு வைத்தார்கள். எல்லாரும் வேடிக்கையாகப் பேசிக்கொண்டிருக்கும் பொழுது ஒருவருக்கும் தெரியாதபடி ஜெய்பால் தனது சிறு கிண்ணத்தைச் சரேலென்று எடுத்து தனது மாமனர் இலையிலுள்ள கிண்ணமிருக்குமிடத்தில் வைத்தான். அங்குள்ள கிண்ணத்தை தன்னிடத்தில் வைத்துக்கொண்டு தனக்கு சமீபத்திலுள்ளவர்களிடத்தில் பேசிக்கொண்டிருந்தான். இச்சமயத்தில் ஜெய்பாலுடைய சிறிய மாமனர் உட்காரவில்லை. வந்தவர்களுக்கு மரியாதை செய்துகொண்டிருந்தும் அவரவர்களுக்குத் தக்க இடத்தையும் காண்பித்துக்கொண்டிருந்தார்.

எல்லா பந்துக்களும் வந்துவிடவே போஜனமுண்ண ஆரம்பித்தார்கள். ஜெய்பால் முதலில் தன் கிண்ணத்திலிருக்கும் பலகாரங்களைப் புசிக்கலானான். சிறிய மாமனரும் உட்கார்ந்து வழக்கம்போல் புசித்தார். ஜெயா ஒன்றையும் தொட்டுப் புசிக்காமலிருந்தாள். இவள இவ்விதமிருப்பதை இவள் சிறிய தாயார் கண்டு 'அம்மா ஜயா! ஏன் நீ ஒன்றையும் தொடவேயில்லை? உனக்குப் பசியில்லையா?' என்று கேட்டாள். ஜயா கலியாணப் பெண்ணுகையால் பேச வெட்கப்பட்டு தலை குனிந்துகொண் டிருந்தாள். மறுபடியும் மன மகிழ்ந்து இதைப் புசிக்கும்படி உன்னை வேண்டிக்கொள்ளுகிறேன். நான் கேட்டுக்கொள்ளுமாறு நீ செய்தால் நான் அதிக திருப்தியடைவேன்."

(இன்னும்வரும்) ☞ தாதா.

இரண்டு இராஜபுத்திரிகள்.

[253-வது பக்கத்தொடர்ச்சி]

Copy-right Reserved.

மறுபடியும் எழுந்து வாசற்படியண்டைபோய் காட்டை நோக்கிப்பார்த்தாள்; கங்காதேவி அங்கிருந்தால் தானே வருவாள். எவரோ இங்குவந்து அவளை அபகரித்துக் கொண்டுபோயிருக்கவேண்டுமென்று நினைத்து அழத்தொடங்கினாள். சரேலென்று வாசற்படியின்மேல் இவள் பார்வை சென்றது. அப்பொழுது பின் வருமாறு அதில் எழுதப்பட்டிருப்பதைக் கண்டாள்:—

"சந்திரமுகி! அவளைப் பின்தொடர்ந்துபோ, குரூரமான விதி எவ்வளவு பக்ஷமாயிருக்கிற தென்பதைக் காண்பாய்".

"இதில் பாதி தான் உண்மையா யிருக்கிறது" என்று தனக்குள் சொல்லிக்கொண்டாள். திடீரென்று இவளுக்குப் பின் நரி வந்து "எந்தப்பாதி" என்று கேட்டது.

வந்தது நரிதான்என்று அறிந்து தைரியங்கொண்டு "கடைசிபாகம். விதிஇன்னும் பட்சமாயில்லை" என்று திரும்பிநரியைப் பார்த்துச் சொன்னாள்.

"உன்னைநன்றியில்லாதவளென்று சொல்வேன். சென்றமூன்றுமாதமாக வேறொருவர் அரமனையில்யாதொரு கவலையின்றி சுகமாக வசித்துக் கொண்டிருந்தாய். இப்பொழுது நீ உனக்குச் சிறிதும் அதிர்ஷ்டமில்லையென்று சொல்லுகிறாயே! இது நியாயமா?" என்று நரி கடிந்து சொல்லி, "சந்திரமுகி, நல்லது, ராக்ஷசன் வந்து கொண்டிருக்கிறானென்பதை உனக்குச் சொல்லவந்தேன். ஆகையால் இனி ஒருநிமிஷங்கூட இங்கு நீ தங்கக்கூடாதென்றும்" சொல்லிற்று.

"ஐயோ! என் அக்காள் இங்கில்லையே, அவளை யாரோ எடுத்துக்கொண்டுபோய் விட்டதாகத் தெரிகிறதே" என்று புலம்பினாள்.

"நீ ஒன்றுக்கும் பயப்படாதே. உனக்குவேண்டிய,பொன் நகை முதலியவைகளை எடுத்துக்கொள். எல்லாம் நன்மையாக முடியும். நாம் காட்டை

விட்டு தாண்டிப்போவோம். கங்காதேவியைக் கண்டு பிடிப்பதில் உனக்கு உதவி புரிகிறேன்" என்றது நரி.

சந்திரமுகி வேண்டிய சில நகைகளை மாத்திரம் எடுத்துக்கொண்டு புறப்பட்டுவிட்டாள். நரியும் இவளுடன் அங்கு மிங்கும் கீழே பார்த்துக்கொண்டு வந்தது. ஒரு துணி முடிச்சலிருப்பதைக் கண்டு இதென்ன பார் என்றது.

சந்திரமுகி அதை எடுத்து அவிழ்த்துப் பார்க்கவே அதில் ஒரு நல்ல முத்து இருக்கக்கண்டாள். துணியைப் பரிசோதித்தாள். இந்த இரண்டும் தனது அக்காளது என்று சொன்னாள்.

நரி: சரி, உன் அக்காள்தான் உனக்கு அவள் சென்ற வழியைக் காண்பிக்க இவ்விதம் செய்திருக்கிறாள்போல் தோன்றுகிறது.

சந்திரமுகி: ஆனால் கீழே பார்த்துக்கொண்டே போவோம் என்று வழி நடக்கவே, ஒரு மூட்டையின்பின் ஒன்றாகத் தென்பட்டது. அவ்வழியே சென்று காட்டைத்தாண்டிவிட்டார்கள். வெகு தூரம் நடந்து வந்தமையால் சந்திரமுகிக்கு பசி எடுத்தது. ஒரு சத்திரம் தென்படவே, அதில் சந்திரமுகியைத் தங்கச்சொல்லி நரி வெளியிற்சென்று நல்லஆகாரம் சம்பாதித்துக் கொண்டுவந்து சந்திரமுகிக்குக் கொடுத்தது. சந்திரமுகி அதைப் புசித்து அன்றிரவை அங்கேயே கழித்தாள். மறுநாள் காலையில் நரி சிறந்த சிற்றுண்டிகளை எடுத்துக்கொண்டு சந்திரமுகியைக் கூப்பிட்டுப் புறப்படு என்றது. இருவரும் புறப்பட்டு ஒரு ஓடையின் சமீபத்தில் தங்கினார்கள். நரி சிற்றுண்டியைப் புசிக்கும்படி சொன்னது. அவ்விதமே அவள் செய்தபின், "நான் இனி உன்னுடன் வரமாட்டேன். பட்டணம் வந்துவிட்டது. இதில் ஒரு தர்மசீலராஜன் வசிக்கிறான். ஒருவேளை உன் தமக்கை இவன் அரமனையில் தானிருப்பாள் என்று இந்த மூட்டைகளால்தெரிகிறது. நீ நான் கொடுக்கும் இந்தப் பணத்தை வைத்துக்கொண்டு அந்த அரசன் பூந்தோட்டத்தில் போயிரு. கூடிய சீக்கிரத்தில் உனக்கு நன்மையுண்டாகும். கெடுதி ஏதாவது உண்டானால் என்னை நினை. நான் உடனே வந்துவிடுகிறேன். நீ ஒன்றுக்கும் பயப்படாதே. நானோ நரி, பட்டணத்திற்குள் வந்தால் ஜனங்கள் என்னைத் தொந்திரவுசெய்வார்கள். ஆகையால் எனக்கு உத்திரவு கொடு" என்று கேட்டது. சந்திரமுகி தேம்பித்தேம்பி அழ ஆரம்பித்தாள்.

நரி, "அழாதே, உனக்கு நற்காலம் சமீபித்துவிட்டது. நான் உன்னைப் போலிருந்தால் கிழவியைப்போல் வேடம் தரித்துக்கொண்டு போவேன். அப்படி நீயும் செய், இல்லாவிடின் உன்னையும் எவராவது கண்டால் உன்னை இட்டுக்கொண்டு போய்விடுவார்கள். பின்பு உன் அக்காளை நீ பார்க்க முடியாது" என்றது.

சந்தி: எனது பிரியமுள்ள நரியே! நீ சொல்வது சரிதான். நான் எவ்விதம் கிழவி வேடம் பூணுவது? நானோ வாலிபப்பெண். கடவுள் இந்த அழகையும், இராஜ பிறப்பையும் கொடுத்து இவ்வளவு துன்பத்துக்கு என்னை ஆளாக்குகிறாரே! நான் எப்படி செல்லுவேன்?

நரி: ஒருவித செடியைக் காண்பித்து, இதன் இலைகளைக் கசக்கி இரசம் எடுத்து மேலே தடவிக்கொண்டால் உன் தேகம் கருத்து கிழவியைப்போல் தென்படும். இதே இலையின் இரசத்தில் ஒரு துளி நீ உட்கொண்டால் நீ வாலிபப்பெண் ஆய்விடுவாய் என்றது.

பின்பு நரி, சிறிது நேரம் காத்திரு, இதோ திரும்பி வருகிறேன் என்று சொல்லிவிட்டு ஓடிப்போய் ஒரு கிழவி வெயிலில் உலர்த்தியிருந்த முரட்டு சிவப்புப் புடவையை எடுத்துக்கொண்டு வந்து "சந்திரமுகி, இதைக் கட்டிக் கொள்" என்றது.

நரி இந்தப் புடவையை வாயில் கௌவிக்கொண்டு தன்னிடத்திற்கு வந்தபொழுது "இது உனக்கு ஏது? என்று சந்திரமுகி கேட்டாள்.

"இது ஒரு வேலியிலிருந்தது" என்று நரி மறுமொழி பகர்ந்தது.

தான் அதைத் திருடிக்கொண்டு வந்ததாக சந்திரமுகியினிடத்தில் சொல்லத் துணியவில்லை.

சந்திரமுகி நரி சொன்ன இலையைப் பறித்து அதன் இரசத்தை யெடுத்து தன் முகம் கால் தேகம்முழுவதும் தடவிக்கொண்டாள். உடனே விகார முகத்துடன் கிழவிபோல் இவள் தோன்றவே, புடவையையும் கட்டிக் கொண்டு ஒரு தடியை எடுத்து ஊணிக்கொண்டு நொண்டி நொண்டிப்போக ஆரம்பித்தாள்.

நரி, "சந்திரமுகி! நான் போய்வருகிறேன். நீ ஜாக்கிறதையாக இந்த நகைகளையும், பொன்னையும் வைத்துக்கொள். உனக்கு கெடுதல் நேரிடும் போது என்னை நினை; உடனே நான் வந்து விடுகிறேன். உனக்கு இனி நற் காலம் சமீபித்துவிட்டது. பயப்படாதே" எனத் தேற்றி விடைபெற்று, திரும்பி காட்டிற்கு வேகமாய்ச் சென்றது.

சந்திரமுகி சற்று தூரம் போகவே ஒரு துணி முடிச்சலைக் கண்டாள். அதிலும் நல்ல முத்து இருந்தது. இப்படி சமீபத்தில் இரண்டு முடிச்சலும், வெகு தூரத்தில் ஒன்றுமாக தென்பட்டன. இவ்வழியே போனாள். ஒவ் வொரு முடிச்சலையும் பார்த்துக்கொண்டு போனதால் கண்பூத்து களைத்துப் போனாள். இச்சிரமத்தைச் சிறிதேனும் கவனியாமல் கடைவீதி, அக்கிர ஹாரம் முதலியவைகளைக் கடந்து கடைசியாக அரமனை வாசலுக்கெதிரில் சில மூட்டைகளைக் கண்டெடுத்து நமது அக்காள் இங்கு தானிருக்கவேண் டும் என்று எண்ணினாள்.

"நான் இந்த அரமனைக்கு சமீபத்திலேயே கூடியமட்டும் தங்கிவசிக் கிறேன். எப்பொழுதாவது இதனுள் போகநேரிடும்" என்று சந்திரமுகி நினை த்தாள்.

அரமனைக்கு அடுத்தாற்போல் அரசனுடைய உத்தியானவனமிருந்தது. அதில் தோட்டக்காரனும் அவன் மனைவியும் வசித்துவந்தார்கள். தோட்டக்

காரன் மனைவி இப்பரிதாபமான கிழவிவேடம் பூண்ட சந்திரமுகியைக்கண்டு யோக க்ஷேமங்களை விசாரித்து, இவள் மீதி இரக்கங்கொண்டு அவ்விராத்திரி தன்னிருப்பிடத்தில் தங்கும்படி சொன்னாள்.

மறுநாள் சந்திரமுகி, தோட்டக்காரன் மனைவியைப்பார்த்து "அம்மா, எனக்கு சிறிதுகாலம் இங்கேயே தங்கியிருக்க உத்திரவளிக்க முடியுமா? நானோ, ஏழை, அனாதி, திக்குமில்லை, திவானுமில்லை, ஏதோ புசிக்க என்னிடத்தில் சொற்ப ரூபாயிருக்கிறது. அதை வைத்துக்கொண்டு என்காலத்தை இங்கு கழிக்கலாமென்று எண்ணுகிறேன் உனக்கு வேண்டுமானால் வாடகை கொடுக்கிறேன்" என்றாள்.

தோட்டக்காரன் மனைவி அம்மா! இது இவ்விராஜ்யத்து மகாராஜாவின் பூந்தோட்டம். நாங்கள் இதற்கு காவற்காரர்கள். எங்களுக்கு கடவுள் கிருபையால் புசிக்க அன்னமும், உடுக்க வஸ்திரமும் உண்டு. உன்னிடத்தில் வாடகைப்பணம் எங்களுக்கு என்னத்திற்கு? அதோ, சிறு குடிசையிருக்கிறதே, அது நன்றாயிருக்கிறது. அதில் நீ சுகமாக வசித்துக்கொண்டிரு. யாராவது "நீயார்" என்றுகேட்டால் "என் உறவினள்" என்றுசொல், என்றுசொல்லிவிட்டு, அவளுக்குவேண்டிய சாமான்களை வாங்கிக்கொடுக்க ஒரு ஆளிடத்தில் சொன்னாள். பின்பு தன் கணவனிடத்திலும் இவ்விதம் தான் ஒரு கிழவி அம்மாளுக்கு வசிக்க உதவிபுரிந்ததைக்குறித்து சொல்லவே, அவனும் மிக்க மகிழ்ந்து, "தர்மம் தலைகாக்கும்" நீ செய்தது நல்லது தான் என்றான்.

முன்னமேயே இந்தத்தோட்டம் அரமனைக்கு அடுத்தாற்போலிருக்கிறதென்று சொன்னோமல்லவா? சந்திரமுகியினிருப்பிடத்திலிருந்து சற்று தூரத்தில் ஒருஅழகிய தடாகமிருக்கிறது. அதில் தாமரைப் புஷ்பங்களுமிருந்தன. சந்திரமுகி அதைக்கண்டு மகிழ்ந்து தினம் வெடியில்காலையில் அதில் ஸ்நானம்செய்யவும், புஷ்பத்தை எடுத்து தலையில் சூட்டிக்கொள்ளவும் ஆசைகொண்டாள். கிழவிவேடம் பூண்டிருந்தபோதிலும்சிறுபெண்தானே இவள். ஆகையால் தான் சுத்தமாயிருக்கவும், புஷ்பத்தை தரித்துக்கொள்ளவும் விரும்புவது சகஜம் தானே. தன் சுயரூபத்தை மறுபடியும்பெற நரி சொன்ன செடியும், குளத்திற்கு சமீபத்திலிருந்தது. இதுவும் இவளுக்கு அதிக சந்தோஷத்தை யுண்டாக்கியது.

சந்திரமுகி தினம் அதிகாலையில் எழுந்து குளத்திற்குப்போய் தெள்ளிய குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம்செய்து நல்லபுடவையைக் கட்டிக்கொண்டபின் இரண்டு தாமரைப் புஷ்பங்களை எடுத்து தன் தலையில் வைத்துக்கொள்வாள். கழுத்தில் நல்ல இரத்ன வைடூரிய ஹாரத்தை அணிந்துகொள்வாள். தனது மற்றபுடவையை நன்றாகத்தோய்த்து அதை உலர்த்திவைப்பாள். அது உலர்ந்தபின் அதை எடுத்து கட்டிக்கொள்வாள்.

இவ்விதம் தினம் சந்திரமுகி செய்துவருவாள். தான் தனது தகப்பனு டைய பீடத்திலிருந்த பொழுது எவ்வளவு சந்தோஷமாக தானும் தனது சகோதரியும் சேர்ந்துவிளையாடினதையும், தாமரைப் புஷ்பங்களை எடுத்து தலையில் வைத்துக் கொண்டதையும் குறித்து நினைத்துதுக்கிப் பாள். சிலவேளையில் தனது சிறியதாயாரின் கொடுமையால் இப்படியிருக்க நேர்ந்ததே என்று விசனிப்பாள். சிற்சில சமயங்களில் தோட்டக்காரன் மனைவி இவளுடன் பேசுவாள். அப்பொழுதுயாவற்றையும் மறந்திருப்பாள்.

தர்மசிலராஜனுக்கும் அவன் மனைவிக்கும் இப்புஷ்பங்களின்மீது மிகப் பிரியம். மேலும் கங்காதேவியு மிங்கு வந்திருக்கிறாளல்லவா? அவளுக்கும் இதன்மீது மிகப்பிரியம். தினம் இரண்டு புஷ்பங்கள் தான் குளத்தில் தோன்றும். இவைகளை சந்திரமுகி எடுத்துக்கொள்வாள்.

இச்சங்கதி ராஜனுக்குத் தெரியவே, மிகவும் கோபங்கொண்டு தினம் சூரியோதயத்திற்கு முன் யார் நம்மை யறியாமல் இப்படி பூக்கும் புஷ்பங்களை எடுத்துக்கொண்டுபோகிறார்கள்? "திருடனுக்கு கடுமையான தண்டனை விதிக்கவேண்டும். அவனைப் பிடித்து கொடுப்பவர்களுக்கு வெகுமதி அளிக்கிறேன்" என்று விளம்பரப்படுத்தினான்.

ராஜனுடைய இளையகுமாரன் தன் தகப்பனார் முன் வந்து "அப்பா, தாங்கள் வெகுமானமொன்றும் கொடுக்கவேண்டியதில்லை. நான் அத்திருடனைக் கண்டுபிடிக்கிறேன்" என்றான்.

ராணி:—ஆம், நமது குமாரன் இரவில் படித்தபின் காற்று வாங்க தோட்டத்திற்குப்போய் வருகிறான். அவன் சுலபமாக அதைச் செய்து முடிப்பான்."

ராஜன்: அப்படியே செய்யட்டும், இது நமது குமாரனுக்கு கஷ்டமாகயிருக்கும் என்று எண்ணினேன். அவன் திருடனைக் கண்டு பிடிக்கும் பக்ஷத்தில் சந்தோஷமே.

அன்றிரவு ராஜகுமாரன் இராப்போஜனமுண்டு தோட்டத்திற்குப் போய் வெகுதூரம் நடந்தான். கடைசியாக தூக்கம் வரவே, குளத்திற்குச்

சமீபத்தில் ஒரு புதர் போன்ற சம்பங்கிக்கொடிகள் படர்ந்து இருந்த இடத்தில் வெடியுமளவும் படுத்து தூங்கிவிட்டான்.

சூரியன் இன்னும் உதிக்கவில்லை. எங்கும் இருளாக யிருந்தது. சந்திரமுகி வழக்கம்போல் குளத்திற்கு வந்து ஸ்நாநம் செய்து கிழவி புடவையைத் தோய்த்து உலரவைத்தாள். பின்பு தனது பட்டு மஞ்சள்புடவையைத் தரித்துக்கொண்டு, கழுத்தில் நவரத்னங்களாலிழைத்த ஹாரத்தை அணிந்து கொண்டு, இரண்டு தாமரைப் புஷ்பங்களை எடுத்து தலையில் சூட்டிக்கொண்டு, சிறிதுநேரம் இருந்து புடவை உலர்ந்தபின் போகலாமென்று நினைத்து, மெதுவாக சலவைக்கல்லால் செய்திருந்தபடிக்கட்டின்மேல் தனதுமெதுவான கால்களை வைத்து அன்னப்பக்ஷியைப்போல் நடந்து வந்தாள். இன்று இவள் முகத்தில் சந்தோஷக்குறி தென்பட்டது.

இளைய இராஜகுமாரன் தன் தமையனைப்போல் மிக்க அழகும் கம்பீரமுமுள்ளவன். இவனுக்கு இன்னும் விவாகம் ஆகவில்லை. படிப்பாளி, அறிவுள்ளவன். கடவுளைத் தியானம் செய்பவன். பெரியோரிடத்தில் மரியாதையும், வணக்கமுமுள்ளவன். இவ்வித நற்குண மமைந்த இராஜகுமாரன் கழுத்தில் விலையுயர்ந்த நவரத்ன ஹாரத்துடனும், விலையுயர்ந்த பட்டாடையைத் தரித்துக்கொண்டு வரும் ஒரு அழகு பொருந்திய பெண்மணியைக்கண்டு திடுக்கிட்டான். இதென்ன ஆச்சரியமாயிருக்கிறதே! இது பேயோ, பிசாசோ? அல்லது இவள் தேவலோகப்பெண்ணோ என்று யோசித்தான்.

மனத்தைரியம் செய்துகொண்டு வேகமாக குதித்துக்கொண்டு போய் "நீ தான் தினம் இவ்விதம் புஷ்பங்களைத் திருடிக்கொண்டு போகிறாயோ" வென்று கேட்டான்.

சந்திரமுகி திடுக்கிட்டு பயந்த பார்வையுடன் தென்பட்டாள்.

"நான் திருடியா...?" என்று தடுமாறிப்பேசினாள்.

இளைய இராஜகுமாரன்: புன்சிரிப்புடன் பயப்படாதே என்றான். "புஷ்பத்திற்கு என்ன குறைச்சல்? உனக்கு எவ்வளவு வேண்டுமானாலும் நான் இக்குளத்தில் இறங்கி பறித்துக்கொடுக்கிறேன்".

சந்திரமுகி தலை குனிந்து தனது புடவையை எடுக்க ஓடினாள்.

இளைய இராஜ குமாரனும் பின் தொடர்ந்து வழியை மறித்துக்கொண்டான்.

சந்திரமுகி:—"நான் போகவேண்டும்" என்றாள்.

சந்திரமுகி, சீக்கிரத்தில் இவ்வூர் பாஷையைக் கற்றுக்கொண்டாள்.

நீங்கள் என்னைப் பார்த்ததாக ஒருவருக்கும் தயவு செய்து சொல்ல வேண்டாமென்றாள்.

இராஜகுமாரன்:—நீ கங்கா தேவியைப் போல் மற்றொரு தேசத்திலிருந்து இங்கு வந்திருப்பது போல் தோன்றுகிறது என்று மறுபடியும் புன்சிரிப்புடன் சந்திரமுகியின் இனிய வார்த்தைக்குப் பதில் சொல்லி, அவள் முகத்தைப் பார்த்த வண்ணமாயிருந்தான்.

சந்திரமுகி:- நீங்கள் கங்காதேவியையறிவீர்களா?

இராஜன், ஆம், அறிவேன். அவள் எங்கள் அரமனையிலிருக்கிறாள்.

உடனே சந்திரமுகிக்கு ஆநந்தமுண்டானது. கையிலிருக்கும் கிழவியின் புடவை நழுவி கீழே விழுந்துவிட்டது. இவள் மௌனமாய் நின்றாள். அந்நியன்வாயிலிருந்துவந்த கங்காதேவியின்பேரைக்கேட்டதே இவள் காதுக்கு இனிய பாடலை ராகத்துடன் பாடினால் எவ்வளவு சந்தோஷமாயிருக்குமோ அவ்வளவு சந்தோஷமாயிருந்தது. அவளைக் காணவேண்டுமென்று விருப்பத்துடனிருந்தாள். அவளைக் காண்போமோ அல்லது காணமுடியாதோவென திகிலடைந்திருந்தாள். அவளைக்காண தன்னால் கூடிய பிரயத்னம் செய்துவந்தாள். ஐயோ, இன்னும் கங்காதேவி தென்படவில்லையென்று அழுதாள். இனி அவளைப பார்க்க முடியாதோவென எண்ணவும் ஆரம்பித்தாள்.

இச்சமயத்தில் தனது அக்காள் பெயரைக் கேட்டதும் ஆநந்தப்ரவசமாய் ஸ்தம்பம்போல் நின்றாள்.

இளைய இராஜன்:—அவள் எனது மதினி. என் தமையன் மனைவி. இந்த அரமனைக்குள் நீ வந்தால் அவளைக் காணலாம். அவளை இங்குள்ளவர்களெல்லாம் இந்த "அரமனைக்கு ஒரு நக்ஷத்திரம்" என்று சொல்லுகிறார்கள். ஏனெனில் அவள் மிக்க அழகுள்ளவள். ஆயினும் நீ அவளைவிட அழகுள்ளவளா யிருக்கின்றாயென்று நினைக்கிறேன்" என்றான்.

இவன் இவ்வளவு பிரியமாய் இவளுடன் பேசினமையால் இவளுக்குப் பயம்நீங்கிற்று. இவள் புன்சிரிப்புடன் சிறிது தலைநிமிர்ந்து இளைய இராஜனைப் பார்த்தாள். இருவரும் சமீபத்தில் நெருங்கவே, இராஜன் அவள் கையைப் பிடித்துக்கொண்டு அரமனைக்குப் போனான்.

அரமனைக்குள் இவ்விருவரும் சென்றவுடன் யாவரும் இப்பெண்ணைக் கண்டபொழுது நமது அரமனை நக்ஷத்திரத்தைப் போலிருக்கிறாள். இவள் நமது இளைய இராஜகுமாரனுக் குற்றமனைவி என்று ஏகோபித்துச் சொன்னார்கள்.

இளையகுமாரன் இவளை தனது தாய் தந்தையர்களிடத்தில் சேர்ப்பித்தான். அவர்கள் இப்பெண்மணியை ஆசீர்வதித்து யோகக்ஷேமங்களை விசாரித்தார்கள்.

சந்திரமுகி:—நான் கங்காதேவியின் இளைய சகோதரி.

அவளைத் தேடுவதின் பொருட்டு தான் பட்ட கஷ்டங்களை எல்லாம் விவரமாய்ச் சொன்னாள். உடனே ராணியார் அவள் ரூபலாவண்ணியத்தையும் வம்சபரம்பரையையும் கேட்டு சந்தோஷப்பட்டு எனது இளையகுமாரன் உன்னை மணம்புரிவான் என்றாள்.

பின்பு கங்காதேவியிருக்கும் இடத்திற்கு இவளை இட்டுக்கொண்டுபோனார்கள். இவளிருக்கும் இடம் வெகு அழகாகயிருந்தது. பட்டு திரைகள் தொங்கிக்கொண்டிருந்தன. அழகான விளக்குகளிருந்தன. இரத்னக்கம்பளம் கீழே போடப்பட்டிருந்தது. சுவரில் அழகான நானாவித புஷ்பங்கள் வைக்கப்பட்டிருந்தன. கங்காதேவி நகைகளை யணிந்துகொண்டு பட்டுப் புடவையைத் தரித்துக்கொண்டிருந்தாள். இவ்வளவிருந்தும் இவள் முகத்தில் சந்தோஷமென்பதேயில்லை. ஒருமாதிரியாகவேயிருந்தாள். தான் எதைக்குறித்து விசனப்படுகிறாள் என்பதையும் ஒருவருக்கும் இதுவரையிலும் இவள் சொன்னவளல்ல. எப்பொழுதும் சந்திரமுகிஎன்ற எண்ணமே இவள்மனதில் குடிகொண்டிருந்தது. அவளை எப்பொழுதுபார்ப்போம் என்றுஏங்கியிருந்தாள்.

சந்திரமுகி இவளிருப்பிடத்திற்கு வந்ததும் வராததும் கங்காதேவி ஓடிவந்து சந்திரா, சந்திரா! கடைசியாக விதி பட்சமாயிருக்கிறதென்று சொல்லி, அவளைக் கட்டி அணைத்துக்கொண்டு முத்தம் கொடுத்தாள்.

சந்திரமுகி:—ஆம், அக்கா, நரி கூடிய சீக்கிரததில் ஒவ்வொன்றும் நன்மையாக முடியும் என்று சொன்னது உண்மையாகவே முடிந்ததென்று மலர்ந்த முகத்துடன் சொன்னாள். இருவரும் வெகுநேரம் சந்தோஷமாக தாங்கள் பிரிந்ததுமுதல் நடந்த சங்கதிகளை யெல்லாம் விரிவாய் சொல்லிக்கொண்டார்கள். அன்று இராஜக்கிரகம் விவாகவீடுபோலிருந்தது. ஒரு விருந்து நடந்தது. மறுநாள் ராஜாவும்ராணியும்தங்களுடைய இளையகுமாரனுக்கு இச்சுந்தரவதியை விவாகம் செய்துவைக்கலாமெனவே, இருவரும் கங்காதேவியிடம் சென்று அவளிடம் தங்கள் விருப்பத்தையும், தங்கள் இளையகுமாரன் விருப்

பத்தையும் தெரிவித்தார்கள். கங்காதேவி இந்த நல்ல சமாச்சாரத்தைக் கேட்டபோது இவளுக்குண்டான சந்தோஷத்திற் களவில்லை. அரமனை முழுவதிலுமுள்ளவர்கள் இப்பொழுது நமது ராஜகுமாரன் மனைவியின் முகம் முன்னைவிட எவ்வளவு அழகாகக் காணப்படுகிறதென்றார்கள்.

தனது சகோதரி தனது புருஷன் தம்பிக்கு மனைவி ஆகிறதைப்பற்றியும், இருவரும் ஒரேயிடத்தில் வசிக்க நேரிட்டதைப்பற்றியும் குறித்து மிக மகிழ்ந்து கடவுளைப் பலவாறு துதித்தாள்.

பின்பு ஒரு சுபமுகூர்த்தம் ஏற்படுத்தி விமரிசையாக இவள் விவாகம் நடந்தது. இவள் தகப்பனாருக்கு "தாங்கள் வந்து விவாகத்தை நடப்பித்துக் கொடுக்கவேண்டுமென்று ஒரு கடிதம் எழுதி தூதர்களிடத்தில் கொடுத்து அனுப்பினார்கள். இராஜன் விவாகப்பத்திரிகையைக் கண்டு மகிழ்ந்து,உடனே மந்திரியைக் கூப்பிட்டு, தனது இருபெண்மணிக்கு வேண்டிய நகைகள், புடவைகள், யானைகள், குதிரைகள், படையாட்கள் முதலியவைகளைச் சீதனமாக அனுப்பியதுடன் தானும் வந்து,தனது புத்திரிகளையும் மருமகன்மார்களையும் கண்டுகளித்து, விவாகமானபின் தம்பதிகளை ஆசீர்வதித்து, அவர்களிடம் விடைபெற்று தனது ராஜ்யத்திற்குச் சென்றனன்.

சந்திரமுகி தோட்டக்காரனுடைய மனைவியை மறக்கவில்லை. அவளுக்கு ஒரு பெரிய வீடு கட்டிக்கொடுத்து, அவள் கணவன் அத்தோட்டத்தை மேல் பார்வை பார்க்கும்படியும் செய்து, அவர்களுக்குத் திரவியம், நகைமுதலியவைகளை இனாமாகக் கொடுத்தாள்.

அவர்கள் தங்களிடத்திலிருந்த கிழவி ஒரு இராஜகுமாரத்தி என்பதையறிந்து ஆநந்தங்கொண்டார்கள்.

கங்காதேவிக்கும் ராணி முதலியவர்களுக்கும் தான் சிலகாலம் தங்கியிருந்த குடிசையைக் காண்பித்தாள். அவர்கள் அதைக்கண்டு அதை எடுத்துவிட்டு அங்கு ஒரு சிறு அழகான மண்டபம் கட்டும்படி உத்திரவு செய்தார்கள். சந்திரமுகியை கிழவிவேடம் போட்டுக்கொள்ளும்படி யாவரும்வேண்ட, இவளும் உடனே அங்குள்ள நரி சொன்ன பச்சையிலையை எடுத்து கசக்கி உடம்பில் தடவிக்கொண்டாள். உடனே விகார முகத்துடன் கிழவியாகிவிட்டாள். வேண்டாம், முன்போல செய்துகொள் என்று சொல்லவே, உடனே ஒரு இலையைத் தின்றாள். உடனே சுந்திரவடிவமுள்ள பெண்மணி ஆய்விட்டாள். இவர்களெல்லாம் ஒருமிக்க சுகமாக வாழ்ந்துவந்தார்கள்.

நரி இங்கிருந்தால் நாம் முன்னிருந்த அரமனை வாசற்படியில் பின் வருமாறு எழுதிவைக்கும்படி சொல்லலாம் என்றாள் சந்திரமுகி.

"கஷ்டங்களைப் பொறுமையுடன் பொறுப்பவர்கள் பூமியை ஆளுவார்கள்".

முற்றிற்று.

கல்வியின் நோக்கம்.

மனுஷனிடத்தில் அநேக சக்திகள் உண்டு. அவை பிரத்யக்ஷமாய்த் தோன்றாவிடினும் மறைந்துள என்பது திண்ணம். அவ்விதம் மறைந்துள்ள பல சக்திகளையும் தளரவிடாமல் நாலாவிதத்திலும் மேம்படச் செய்வதே கல்வி. உற்றுநோக்கில் ஒரு மனிதனுடைய ஜீவிய காலம் எல்லாம் இச்சக்திகளனைத்தும் விருத்தியாய்க்கொண்டே வருகின்றன. எப்படியெனில் அநுபவத்தாலும், அரிய பெரிய விஷயங்களாலும் அறிவு விர்த்தியாகின்றது; மனேசக்தி தளிர்விட்டு வளர்கின்றது.

கல்வியின் சிறப்பை இவ்வளவுதான் என்று சொல்ல முடியாது. வாழ்நாட்கு உதவியாய் இருக்கும் பொருட்டு சிறுவயதிலேயே பள்ளியில் பயின்று தெரிந்துகொள்ளவேண்டிய சிலவற்றை நாம் பேசப் புகுவோம்.

கல்வியின் முக்கிய ஹம்சங்களை அறியவேண்டுமாயின் மனுஷ சுபாவத்தின் மூலாதாரங்களைத்தெளிவாய் அறியவேண்டியது அவசியம். முதலாவது, மனிதனுக்கு தேகம் ஒன்று உண்டு; அதையே கருவியாகக்கொண்டு சில காரியங்களைச் செய்கிறோம். இரண்டாவது மனஸ் ஒன்று உண்டல்லவா; அது தேகத்தோடு கூடி உலகில் தோன்றும் பலவற்றையும் காரணகாரியங்களோடு பகுத்தறியும் சக்தியுடையது. கடைசியாய்ப் பார்க்கில் என்றும் அழியாத, உண்மை உருவான ஆத்மா ஒன்று உண்டே, அதுவே ஸ்தூலதேகத்திலுள்ள மனதிற்கு உறைவிடமானது.

ஆகையால் மனுஷ சுபாவத்தின் இம்மூன்று மூலாதாரங்களையும் சரியானபடி திருத்தி அவற்றைப் பழக்கத்திற்குக் கொண்டுவர முயலல்வேண்டும். இதுவே கல்வியின் நோக்கம் அவைகளில் ஏதேனும் ஒன்றைக் கவனியாவிட்டால் நாம் கோரிய எண்ணம் நிறைவேறுவது அசாத்தியம். பழக்கத்திற்குக் கொண்டுவர முக்கியமாய் கவனிக்கவேண்டியவை எவை?

தேகம் ஆரோக்கியமாய் இருக்கவேண்டுமானால் நாம் சாப்பிடும் உணவு சுத்தமாயும், நல்லதாயும், போஷிக்கத்தக்கதாயும் இருக்கவேண்டும். கனிந்த பழமும், பாலும் நமது தேகத்திற்கு உகந்த உணவு. புலால் செத்த பிராணியின் தேகம்; நாற்றமுடையது. அதை எவ்வளவுதான் சுத்தி செய்து பக்குவமாய்ச் சமைத்தாலும், இறைச்சி தேகசௌக்கியமான உணவு ஆகாது. இது சாஸ்திர ஆராய்ச்சியாலும் அநுபவத்தாலும் வெளியாகின்றது. சுருட்டு, மது முதலிய லாகிரி வஸ்துக்களும் கெடுதியை விளைவிக்கும்; அவற்றையும் நீக்கிவிடவேண்டியதே.

தேகம் நன்றாய் வளரவேண்டுமானல் தேகாப்பியாசம் செய்யவேண்டியது முக்கியம். செய்யாவிடில் தேகத்தின் அங்கங்களும், அவற்றின் தசைநார்களும் சரியாய் வளரா; பலமுள்ளனவாயுமிரா. ஆகலால் தேகத்தைச் சீர்ப்படுத்தி வைக்க அநுதினமும் தப்பாமல் தேகப்பயிற்சி செய்யவேண்டியது அத்தியாவசியம். அதோடு சுத்த ஆகாயத்தையும் உட்கொள்ளவேண்டும்; காணும், தன்னைச் சுற்றி உள்ள எவையும் சுத்தமாய் இருக்கும்படி பார்த்துகொண்டு வரவேண்டும்.

மனஸ்விசாலமாவது எப்படி? தேகத்தைப் போலவே அதற்கும் சரியான பயிற்சி அவசியம். ஒவ்வொரு வஸ்துவையும் பார்த்து ஊகித்துக் காரணகாரியங்களை அறியும்படி பழக்கவேண்டும். எதையும் மனப்பாடம் செய்

தால் புத்தி விருத்தி அடையாது. தேகம் ஆரோக்கியமாய் இருக்க எப்படி சுத்த ஆகாரம் அவசியமோ, அப்படியே, ஆழ்ந்த கருத்தும், தக்க யோசனையும் இருக்கச் சித்தம் சுத்தியாய் இருக்கவேண்டியது அத்தியாவசியம். கெட்ட எண்ணங்கள் மனதிற் கொள்ளவே கூடாது.

இனி ஆத்மாவைப்பற்றிப் பேசுவோம். அது மேன்மை அடையும் வழி எப்படி? தர்மத்தைக் கைக்கொண்டு நன்னெறியில் பழகி அதன்படி ஒழுகித் தங்கள் கடமையைச் சரிவரச் செலுத்தவேண்டும். அதற்கு மத சம்பந்தமான கல்வி தேவை. சமயநெறி ஒன்றே தீவினையைப் போக்கி சாயுஜ்யத்தில் அமர்த்த வல்லது; இல்லற துறவற நிலைக்கு இதுவே சாதனம். இதைக்கொண்டுதான் என்று மழியாப் பரம்பொருளை இகத்திலும் பரத்திலும் அறியலாகும். ஆகவே நன்னெறியில் நிற்கப் பயிலுவது அவசியமல்லவா!

மேற்கூறிய வழிகளில் கல்வி கற்பித்தால், (1) தேகம் பலமும், சுகமும் உள்ளதாயும், மனஸ் நுட்பமாயும், அதிசீக்கிரத்தில் விஷயங்களை கிரகிக்கவும், உண்மை அறியவும் கூடிய சக்தி உள்ளதாயும், (3) தர்மார்த்தங்களுக்குக் காரணமாயுள்ள நம்குணம் நெறிபிறழாது இருக்கும் என்பது நிச்சயம். இம்மூன்று விஷயங்களிலும் பயிற்சி இல்லாதவனைக் கற்றவனென்று சொல்லத்தகாது.

☞ ஈரோடு. தி. பாலக்ருஷ்ண முதலியார்.

நமது அரசசக்ரவர்த்தியின் சரித்திரம்.

[279 - வது பக்கத்தொடர்ச்சி.]

இந்த விவாகம் நிச்சயமானதில் விக்டோரியாராணியார் மிகுந்த களிப்படைந்து இருவரையும் முகமலர்ச்சியுடன் ஆசீர்வதித்துவந்தார்கள். இம்பீரயல் இன்ஸ்டிட்யூட் விக்டோரியா ராணியாரால் திறக்கப்பட்டபொழுது யார்க்பிரபுவும், மே அரசியும் வந்திருந்ததை ஜனங்கள்கண்டு குதூகலத்துடன் கரகோஷம் செய்தார்கள். இச்சமயத்தில் அலக்சாண்டிரா ராணியார் தமது இரண்டு புத்திரிகளுடன் கிரீஸ் தேசத்திற்குப் போயிருந்தார்கள். தங்களது குமாரனது கலியாணம் நிச்சயமானதைக் கேட்டுப் பரமானந்தங்கொண்டு தங்களது அத்யந்த சந்தோஷத்தை தந்திமூலமாகத் தெரியப்படுத்தி ஒரு வாரத்திற்குள் லண்டன்மா நகருக்குவந்து சேர்ந்தார்கள். விவாகத்திற்கு வேண்டிய பலவிதமான ஏற்பாடுகளைச் செய்துவைத்தார்கள். உலகத்திலுள்ள பல தேசங்களிலிருந்து விலையுயர்ந்த வெகுமதிகள்வந்து குவிந்துகொண்டிருந்தன.

ஜுன்மீ 14௳ யார்க் பிரபு இராஜ குடும்பத்துக்கு வெகுகாலமாக சிநேகமுள்ளவரும் வயது முதிர்ந்தவருமான அட்மிரல் கனம் சர்ஹாரி சுப்பிலேக்கண்டு தமது சந்தோஷத்தைத் தெரிவித்தார். அவருக்கு அப்பொழுது 84-வது வயது முடிந்ததினம். அங்கு புசித்து தமது கையெழுத்தை

ஒரு கடிதத்தில் எழுதி வைத்தாராம். இப்பொழுது லார்ட் வெர்ஸ்லியாயிருக்கும் சனவான் ஜார்ஜ் அரசரையும் அரசியையும் கௌரவப்படுத்தும் பொருட்டு ஒரு தோட்டக் கச்சேரி வைத்தார். அங்கு வந்திருந்த பல பிரபுக்களுடனும், சீமாட்டிகளுடனும் சரசமாய் பேசிக்கொண் டிருந்தார்களாம்.

விவாக வைபவத்திற்காகமுன்னே அலக்சாண்டிரா ராணியாரும் 7-வது எட்வர்டும் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவர திட்டம் செய்தார்களென்று சொன்னோ மல்லவா? இன்னும் ஊர்கோலம் செல்லும் மார்க்கங்களில் மகர தோரணங்கள், பூப்பந்தல், கொடிகள் முதலியவைகளால் அலங்காரம் செய்யப்பட்டு வந்தன.

மணமகன் சித்திரம் வரைவதில் கைதேர்ந்த சர் லியூக் பைல்ட்ஸ் என்பவருக்கு தமது அருமையான தாயாரைப்போல் அழகான சித்திரப் படம் வர்ணமிட்டு வரையும்படி உத்திரவு செய்தார். அவர் அவ்விதமே செய்துகொடுக்க, அதை நமது சக்ரவர்த்தியும், சக்ரவர்த்தினியும் தங்கள் ஆஸ்திகளிலொன்ருகப் பாவித்து வெகுசிரத்தையுடன் அதைப் பாதுகார்த்து வருகிருர்கள். தாயிடத்தில் அன்பு மிகுதியால் இவ்விதம் செய்தார் என்றே நாம் சொல்லவேண்டிய தவசியமில்லை.

ஏனெனில் அலக்சாண்டிரா ராணியார் தமது குழந்தைகளைச் சரியான வழிகளில் மிக்க அன்புடன் நடத்தி வந்திருக்கிருர்கள். ராணியார் குணங்களெல்லாம் ஜார்ஜ் அரசரிடத்தி லிருக்கின்றன.

பக்கிங்ஹாம் அரமனையில் ஜுன்மாதத்தில் ஒரு பாட்டு கச்சேரி நடந்தது. அப்பொழுது நமது சக்ரவர்த்தினி மேராணியார் வரவழைக்கப்பட்டிருந்தார். ராணியார் சந்திரனைப்போல் பிரகாசித்துக் கொண்டிருந்ததை அங்கு வந்தவர்கள் கண்டுகளித்தார்கள். யாவரும் நமது குலத்தைப் பிரகாசிக்கச் செய்யும் மாது சிரோமணி நீடுழி வாழவேண்டும் என்று பிரார்த்தித்து, பலவித இராகத்துடன் பாடினுர்கள்.

விக்டோரியா ராணியார் தமது பேரன் ஆல்பர்ட் விக்டர் மரணத்தால் மிக்க பலஹீனமாய் துக்கசாகரத்தில் மூழ்கி யிருந்தார்கள். இவ்விராணியார் துக்கம் கொண்டாடிக்கொண்டு பால்மோரல் அரமனையில் வசித்துக்கொண்டிருந்தார்கள். தமது இன்னெருபேரனுகிய ஜார்ஜுக்கு விவாக நிச்சயமான நாள் முதற்கொண்டு விக்டோரியா ராணியாருக்கு தேகவலிமையும், மனதிடமும், சந்தோஷமும் உண்டாகத் தலைப்பட்டன. இது சகஜமன்ருே?

விவாக விஷயமாய் செய்யவேண்டிய ஒவ்வொரு காரியமும் மகாராணியார் சம்மதித்து அங்கீகரித்த பின்தான் செய்யப்பட்டு வந்தது. இது மகாராணியாரிடத்தில் வைத்திருந்த இராஜ குடும்பத்தார்களுடைய அன்பையும், மரியாதையையும், கௌரவத்தையும் காண்பிக்கின்றதல்லவா?

யார்க் பிரபு ரிச்மாண்டிலுள்ள முனிசிபல் கட்டடத்தைத் திறந்தார். அப்பொழுது ஒருவாரம் வொயிட்லாட்ஜில் தங்கியிருந்தார். இச்சமயத்தில் ஜார்ஜுக்கும் மேரி ராணியாருக்கும் விவாகம் ஆகப்போகிற தென்கிற சமாச்சாரத்தைக் கேள்வியுற்ற வயதுமுதிர்ந்த ஒரு சீமாட்டி ஒட்டு வேலையால் தானேசெய்த மெத்தையையும், ஒரு ஜதை கால் ஜோடாக அணியும் சட்டையையும் விவாக வெகுமதிகளாக அத்தம்பதிகளுககுக் கொடுக்க எடுத்துக்கொண்டு வந்தாளாம். போலீஸ் சேவகர்கள் இம்மாதை உள்ளே விடாமல் தடுத்தமையால், மிக்க கோபங்கொண்டு வருத்தப்படுகையில் ஜார்ஜ் அரசர் கேள்வியுற்று அம்மாதை உடனே உள்ளே விடும்படி உத்திரவளித்தது

அவருக்கிருக்கும் ஸ்திரீகளிடத்திலுள்ள மரியாதை குணத்தைக் காண்பிக்கிறதல்லவா?

ராயல் இன்ஸ்டிடியூடில் ப்ரோபஸர் டீவர் (Liquid air) வாயு நீரான வஸ்துவாகும் அதிசயங்களைப் பற்றி சிறந்த உபந்நியாசம் செய்தபொழுது 7-வது எட்வர்ட் அவர்கள் சபைத்தலைமையை வகித்தார். அச்சமயத்தில் ஜார்ஜ் அரசரும சென்றிருந்தார். லார்ட் சாலிஸ்பரி முதலிய பிரபல பிரபுக்கள் இப் பிரசங்கத்தைக் கேட்க வந்திருந்தார்கள். அவரது குமாரரும் வாயு நீரான வஸ்துவாகு மென்பதை சாஸ்திரோக்தமாய் நிரூபிப்பதை யறிய மிக்க பிரியமுடையவரா யிருந்தார்கள்.

நமது ஜார்ஜ் அரசர் மேற்சொல்லிய சபைகளுக் கெல்லாம் சென்ற போதிலும் அங்கு கூச்சமுள்ளவராகத் தென்பட்டாராம். இதற்குத் திருஷ்டாந்தமாக லண்டனில் ஒரு விருந்து நடந்தபொழுது தமது சிநேகிதரொருவரிடத்தில் "இங்கு வந்திருக்கும் ஒருவரும் எனக்குத் தெரியவில்லையே! நானோ அநேகமாக கடற்படையில் இதுவரையி ருந்தது உமக்குத் தெரியுமே" என்றாராம். ஆயினும் விவாகப்பொருத்தம் நிச்சயம் செய்தபின் இவரும் மேரி ராணியாரும் அடிக்கடி ஒவ்வொரு சபைக்கும் தோட்டக்கச்சேரி, விருந்து முதலியவைகளுக்கும் அழைக்கப்பட்டமையால் இவரது கூச்சம் போய்விட்டது. இவர் யாவருடனும் தாராளமாகப் பழக ஆரம்பித்துவிட்டார். இதுவரையிலும் கப்பற்படையிலிருந்தவர் இப்பொழுது தமது பந்து மித்திரர்களுடன் கூடிக்குலாவிக் கொண்டும், ஒவ்வொரு பொதுக்காரியங்களுக்கும் போய்க்கொண்டுமிருப்பது புதுமையாயிருந்தபோதிலும், இது இவருக்கு இவ்விதமகோற்சவத்தில் அதிக ஆநந்தத்தைவிளைவித்ததாம். இவர்களைவிட வயதில் தாழ்ந்தவர்கள்கூட அவ்வளவு மனமகிழ்ச்சியுடன் தென்படவில்லையாம்.

விவாகம்.

விவாகத்திற்கு இரண்டு மூன்று நாள்களுக்கு முன் வெகுமதியாக அளிக்கப்பட்ட விநோதப் பொருள்களை யாவருக்கும் காட்ட வொயிட்லாட்ஜில் ஒரு விருந்து நடந்தது. டெக் பிரபுவின் மனைவியார் (Duches of Teck) தமது புத்திரியின் ராஜவம்சத்தைச் சேர்ந்த சிநேகிதர்களையும், பிரபுக்களையும் வரவழைத்ததுமன்றி அநேக காலமாக தமது புத்திரியை விசுவாசித்து வந்த ரிச்மாண்டிலுள்ளவர்களையும் வரவழைத்திருந்தார்கள்.

விவாகமானபின் 3500க்கு மேற்பட்டுள்ள சிறந்த வெகுமதிகளைப் பொது ஜனங்கள் கண்டு களிக்க வேண்டுமென்று இம்பீரியல் இன்ஸ்டிட்யூடில் வைக்கப்பட்டன. அவாவுள்ள ஆயிரக்கணக்கான ஜனங்கள் வந்து இவைகளைப் பார்த்தார்களாம்.

இவைகளில் நல்ல வேலைப்பாடுள்ள நகைகளும், வீட்டுக்குரிய அலங்காரப் பொருள்களும் அடங்கியிருந்தன. காமன் சபையில் ஜார்ஜ் என்று பேருள்ளவர்களெல்லாம் சேர்ந்து அண்டியாளமாக ஒரு வெகுமதி அனுப்பினார்கள்.

வைரக்கல்லால் ஒரு நேர்த்தியான ஹாரம் மணமகளுக்கு விக்டோரியா ராணியாரால் வெகுமதியாக அளிக்கப்பட்டது. மணமகன் மணமகளுக்கு அளித்த வெகுமதிகளில் அருமையான நங்கூரம் போன்ற நகை. இதில் வைடூரியம் இரத்தினம் முதலியகற்கள் இழைக்கப்பட்டிருந்த மையால் வெகு பிரகாசமாயிருந்ததாம். யூஜினி ராணியார் வைரத்தால் இழைக்கப்பட்ட மார்ச்சட்டையைச் சேர்க்கும் பொத்தானைப் போன்ற நகையை மணமகளுக்குக் கொடுத்தார்கள்.

☞ பத்திராதிபர்.

ருஷ்ய ஸ்திரீகள்.

ருஷ்யாதேசத்து மாதர்கள் கன்னிகைகளாயிருக்கையில் பெற்றோர் வார்த்தைக்குச் சற்றும் தவறாது கீழ்ப்படிந்தே நடக்கவேண்டும். தக்க வயது வந்தபோதிலும் அவர்கள் நிலைமை மாறுபடுவதில்லை. சாகும் வரையில், ஒருத்தி கலியாணம் செய்துகொள்ளாமல் கன்னிகையாக இருந்துவிட்டாலும் பெற்றோர் வார்த்தைக்கும் அபீஷ்டத்திற்கும் உள்ளடங்கியே குடும்பத்தில் உழலவேண்டும்.. அவர்கள் இவள்மீது செலுத்தும் அதிகாரம் இவ்வளவுதான் என்று சொல்லமுடியாது. அவள் நடவடிக்கை பெற்றோர்களுக்குத் திருப்தியாய் இல்லாவிடின் யாதொரு ஞாயவிசாரணையுமின்றிக் கொஞ்சகாலம் மடத்திற்காவது, வேறு எங்கேயாவது தன் குற்றங்களைத் திருத்திக்கொள்ள அனுப்பிவிடுகிறார்கள். கலியாணமான பின்னும் தகப்பன் சித்தப்படிக்கு நடந்து கொள்ளவேண்டும். அவர் தமக்குத் தேக சௌக்கியமில்லாவிட்டால் போஷிப்பதற்குத் தன் மகளை உடனே வரவழைக்கலாம்; அல்லது தன் மனைவி இறந்து விட்டாலும் மூன்று மாதத்திற்கு வீட்டுக்காரியங்களைச் செய்விக்கச் சொல்ல சுதந்தரம் உண்டு. ஒருவேளை அவள் புருஷனே இறந்துவிட்டாலும் தகப்பன் வீட்டிற்கு அவள் உடனே திரும்பி வரவேண்டும்; அவளுக்கும், அவள் குழந்தைகளுக்கும் இவனே சட்டப்படி குடும்ப ரக்ஷகனாகிறான். எப்பெண்ணும் பெற்றோர் சித்தமின்றி மணக்கலாகாது. தகப்பன் ஒத்துக்கொள்ளாதிருந்து இவளுக்குப் பணமும் இருக்குமாயின் ஞாயாதிபதிக்கு விண்ணப்பம் செய்துகொள்ளலாம்.

ஒருபெண் கலியாணம் செய்துகொண்டபின் புருஷனுக்கு அடக்கமாகிறாள். "பெற்றோருக்கும் அடங்கி, புருஷனுக்கும் அடங்கி இருவருக்கும் திருப்தியுண்டுபண்ணுவது அசாத்தியம்" என்றெண்ணியே ருஷியாதேசத்திற்குரிய சட்டங்களில் அது கண்டிருக்கிறது. ஆகையினாலேதான் தாய் தந்தையரின் அதிகாரத்தை நீக்கி புருஷனின் அதிகாரத்திற்கு உள்ளடக்கியிருக்கிறார்கள். அண்டை வீட்டிற்காயினும் அயலூருக்காயினும் புருஷன் "அனுமதி" பெற்றாலன்றி அவள் போகக்கூடாது. "அனுமதி" பெற்றுக்கொண்டாலும் அதிற்குறித்த காலத்திற்குள்ளாகத் திரும்பிவந்துவிடவேண்டும். வரமுடியாவிட்டால் உடனே தெரியப்படுத்தி "அனுமதி"யைப் புதுப்பித்துக் கொள்ளவேண்டும்.

ஒரு புருஷன் ஞாயஸ்தலத்தில் தன் மனைவிக்கு எதிர்கக்ஷியில் சாக்ஷயம் கூறலாம். ஆனால் மனைவி தன் புருஷனுக்கு எதிர்கக்ஷியில் சாக்ஷயங் கூறவா

லாகாது. ஸ்திரீகளின் சாக்ஷியத்தை சற்று குறைவாகத்தான் மதிக்கிறார்கள். இருவர் சாக்ஷியங் கூறுவதில் ஒன்றுக்கொன்று பேதப்பட்டால் குழந்தை, களைவிடவயதானவர்கள் வார்த்தையும், மாதரைவிடபுருஷர்களின் வார்த்தையும் சிலாக்கியம்" என்று சட்டம் தெரிவிக்கிறது.

நகர்வாசி:—அத்தேசத்திய குடிஜனங்கள் "ஏழு ஸ்திரீகளைச் சேர்த்தால் ஒரு ஆத்மாவாகும்" என்றும், "மாதர்களுக்கு ஆத்மா கிடையாது, உயிர்தான்" என்றும் சொல்லுகிறது வழக்கம். மாதர்களின் நுண்ணறிவைக் குறித்து "மயிர் மினுக்கே யன்றி மனோவிருத்தியேது" என்று சூரத்துள்ள மற்றைய பாலார் கேவலமாய்த் தள்ளிவிடுகிறார்கள். யூரப்தேசங்களிலுள்ளன போல் ஜேஷ்ட குமாரனுக்கே எல்லாவுரிமைகளும் என்ற சட்டம் இங்கே கிடையாது. சொத்துக்குரியவர் இறந்துவிடில் அவர் எல்லா ஆண்பிள்ளைகளுக்கும் சொத்தைச் சரியாகப் பங்கிட்டுக் கொடுக்கவேண்டும். ஆண் பிள்ளைகளில்லாமற்போனால் பெண்பிள்ளைகளுக்குப் பிரித்துக்கொடுப்பதோடு தாயாருக்கும் தாவரசொத்தில் ஏழிலொருபங்கும் ஜங்கமசொத்தில் நாலிலொரு பங்கும் பிரித்துக்கொடுக்கவேண்டும். பெண்களுக்கு இவ்விதம் சொத்து ஏற்பட்டால் விவாகமான பின்னும் அதற்குரியவராகின்றனர். ஸ்திரீகளுக்கு ஊர்க் கூட்டங்களிலும், முனிசிப்பல் கூட்டங்களிலும் ஓட்டுக்கொடுக்கும் அதிகாரம் ஏற்படினும், சிநேகிதர் பந்துக்களாயுள்ள புருஷரைக்கொண்டே நடவடிக்கை நடத்தவேண்டியிருக்கிறது. ஆகையினாலே அத்தேசத்து ஸ்திரீகள் எவ்விதத்திலும் சுதந்தரமில்லாமல் புருஷர்களுக்கு அடக்கமாய் வாணாளைக் கழிக்கின்றனர். கல்விதேர்ச்சி யடைந்தாலன்றிக் காரியமாகாது.

☞ ஈரோடு. பாலகிருஷ்ணமுதலியார்.

பாரதநீதி.

பெற்றோர்களையும், ஆசாரியர்களையும் பற்றியது.

1. பூமியைக் காட்டிலும் தாய் பெரியவள். ஆகாசத்தைவிட தந்தை பெரியவன். மனது காற்றைக்காட்டிலும் அதிக வேகமுடையது. துக்கம் எல்லாவற்றிலும் பெரிது.—ஆரண்ய பர்வம.

2. தாய்க்குச் சமானமான ஆதரவு வேறு இல்லை. அவளுக்குச் சமானமானி கதி வேறு இல்லை. அவளைப்போலக் காப்பாற்றக் கூடியவரும் இல்லை. அவளுக்கு ஒப்பாகப் பிரியமுடையவர்களும் இல்லை.—சாந்திபர்வம்.

3. தந்தையே புண்ணியம். தந்தையே சுவர்க்கம். பிதாவே மேலான தபசு. தந்தையைச் சந்தோஷப்படுத்தினால் சகல தேவதைகளும் சந்தோஷப் படுவார்கள்.—சாந்திபர்வம்.

4. ஓ! தர்மந்தெரிந்த மகாபுருஷா! ஆசாரியருடைய வார்த்தைகள் தர்மத்தை யனுசரித்திருக்கு மென்று சொல்லப்பட்டிருக்கிறது. தாயானவள் எல்லா ஆசாரியர்களுக்கும் மேலான குரு.—ஆதிபர்வம்.

5. எவனொருவன் மாதாபிதாக்களின் வாக்கியத்தின்படி நடந்து, அவர்களுக்கு நன்மையைச் செய்து, நல்ல வழியில் நடக்கிறானோ அவனே புத்திரனென்னப்படுவான்.—ஆதிபர்வம்.

6. நற்குணமுண்டையவனும், பெற்றோர்களுக்கு மேன்மையை எப்பொழுதும் தேடுகிறவனுமான குமாரன் மற்றவர்களைக் காட்டிலும் வயதில் சிறியவனானாலும் சகல நன்மைகளையு மடையத்தகுந்தவன். ஆகையால் அவன் மகா உத்தமனாவன்.—ஆதிபர்வம்.

7. அசட்டையின்றி உன் பெற்றோர்களுக்குப் பணிவிடை செய். அதற்கு மேலான தர்மம் வேறில்லை — ஆரண்யபர்வம்.

8. ஒரு பூ தன்னுடைய செடியினின்றும் விழுவது முண்டு. ஒரு பழம் தன் மரத்தைவிட்டுக் கீழே விழுவது முண்டு. ஆனால் ஒரு தகப்பன் தனக்கு எவ்வளவு மனவருத்த மிருந்தாலும், தன் குமாரனிடத்திலுள்ள பிரியத்தை விட்டுவிடான்.—சாந்திபர்வம்.

9. ஆசாரியனுக்குப் பணிவிடை செய்வதனால் ஆயுளும், கீர்த்தியும், சம்பத்தும் விருத்தியாகும். ஆகையால் அவர்களுக்குத் தக்க ஆசனங்கொடுத்து, வந்தனஞ்செய்து, அவர்களை நாம் மரியாதைப்படுத்தவேண்டும்.—ஆநுஶாஸநிகபர்வம்.

10. ஒரு மகாபாபி ஒரு மனிதனுக்கு மதுரமான வார்த்தைகளைச் சொல்லும்படி யகப்படுவான். ஆனால் நல்ல புத்திமதிகள் தனக்குப் பிரியமில்லாதவைக ளானாலும், அவைகளைச் சொல்லுகிறவனும், கேட்கிறவனுமான ஒருவன் அகப்படுகிறது வெகு துர்லபம்.—ஸபாபர்வம்.

11. ஒருவன் நமக்குச் சத்துருவாக விருந்தாலும் அவனிடத்தில் நல்ல குணம் இருந்தால் அதை நாம் தெரிவிக்கவேண்டும். நமக்கு ஒருவன் குருவாக விருந்தாலும் அவனிடத்தில் கெட்டகுணமிருந்தால் அதை நாம் வெளியிட்டுச் சொல்லவேண்டும். ஆகையால் நாம் எப்பொழுதும் நம்முடைய புத்திரனுக்கும் சிஷ்யனுக்கும் நல்ல புத்தியை போதிக்கவேண்டும்.—விராடபர்வம்.

டெல்லி தர்பார்! ✻ டெல்லி தர்பார்!!

இனி ஒவ்வொருமாதப் பத்திரிகையிலும் சித்திரப்படங்கள் வெளிவரும். டிசம்பர்மாதப் பத்திரிகையில் டெல்லி தர்பார் முழு விவரமும், அதன்சம்பந்தமாக 6-சித்திரப்படங்களும், 10-சித்திரப் படங்களடங்கிய ஒரு கதையும் வெளிவரும். இப்பத்திரிகையின் விலை அணா 4 தான். வேண்டுவோர் இப்பொழுதே ரிஜிஸ்டர் செய்துகொள்ளவேண்டும். இது டிசம்பர்மீ 20உ யன்று வெளிவரும்.

முக்கிய விளம்பரம்.

இவ்வருஷ சந்தாத்தொகை கொடுக்காதவர்களுக்கு டிசம்பர்மீ பத்திரிகை வி-பி-யில் அனுப்பப்படும். சந்தாதாரர்கள் தயவுசெய்து வழக்கம்போல் பத்திரிகையைப் பெற்றுக்கொண்டு பணம் அனுப்பி உதவிபுரிவார்களென்று நம்புகிறோம்.

☞ சி. எஸ். இராமசாமி ஐயர்,
மாதர் மனோரஞ்சினி பத்திராதிபர்.